# அரசபயங்கரவாதமும் ஆயுதப்புரட்சியும்



2566
89992
0.552

Tamileelam Archive

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# அரச பயங்கரவாதமும்

# ஆயுதப் புரட்சியும்

PUBLIC LIBRARY
JAFFNA.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

சன நூலகம்
மாநகராட்சி மன்று
29-11-1992
89992
யாழ்ப்பாணம்

வெளியீடு

பிரச்சார வெளியீட்டு வாரியம்

தமிழீழ விடுதலைப் புலிகள்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

நான்காம் பதிப்பு யூன் 1991
புத்தக வெளியீட்டு எண்; 3

320.512 / 2

## காணிக்கை

அரச பயங்கரவாதிகளின் கொலைவெறிக்கு ஆளாகி
சிந்திய குருதியால்
விடுதலை விதைகளைத் தூவிச் சென்ற
தமிழீழ விடுதலைப் போராளிகளுக்கு
இச்சிறு நூல் காணிக்கை.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின்
தலைவராகவும் தளபதியாகவும் இருந்து
இயக்கத்தை வழிநடத்திவரும்
வே. பிரபாகரன் அவர்கள்

89992

PUBLIC LIBRARY
JAFFNA

# அரச பயங்கரவாதமும் ஆயுதப் புரட்சியும்

தமிழீழ அரசியற் சித்தாந்த உலகில் பயங்கரவாதம் என்ற பதம் இன்று பலரால், பல்வேறு அர்த்த பரிமாணங்களில் பாவிக்கப்பட்டு வருகிறது. ஈழத் தமிழனின் விடுதலை எழுச்சிக்கு இழிவு கற்பிப்பதையே இலட்சியமாகக் கொண்ட சிங்கள முதலாளிய அரசின் மும்முரமான பிரச்சாரம் ஒருபுறமிருக்க, தமிழ் அரசியல்வாதிகளினதும், 'இடது' சார்பான இயக்கங்களினதும் குதர்க்கமான வியாக்கியானங்களும் இச்சொற் பிரயோகம் குறித்து தமிழ் பேசும் மக்கள் மத்தியில் பெரும் குழப்பத்தை உண்டு பண்ணியுள்ளன. இச்சொற்பிரயோகம் குறிப்பாக எமது விடுதலை இயக்கத்தின் ஆயுத வடிவம் கொண்ட புரட்சிப் போராட்டத்தைத் திரித்துக்காட்ட விழைவதாலும், தமிழீழ தேசிய விடுதலை இயக்கமானது ஆயுதப் போராட்டமாக 'உயர்' மட்ட அரசியல் உருவம் பெற்றுள்ளதாலும், சிங்கள அரசினதும் தமிழ் அரசியல்வாதிகளினதும் இந்த விஷமப்பிரச்சாரத்தை முறியடிக்க நாம் கடமைப்பட்டுள்ளோம். ஆகவே, இச்சந்தர்ப்பத்தில் உண்மையான பயங்கரவாதிகள் யார்! புரட்சிவாதிகள் யார்! என்பதை எமது

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

மக்களுக்கு எடுத்துக் கூறும் அதே வேளை, எமது புரட்சி இயக்கத்தின் வரலாற்றுத் தோற்றம். எமது போராட்ட வடிவம், போர் யுக்திகள், போர் முறைத் திட்டம், போராட்ட இலட்சியங்கள் என்பன பற்றியும் இப்பிரசுரத்தில் இரத்தினச் சுருக்கமாக எடுத்தியம்ப விரும்புகிறோம்.

மூன்றாவது உலக நாடுகளில் இன்று கொழுந்துவிட்டெரியும் சுதந்திர எழுச்சியைக் கொன்றுவிடும் நோக்குடன், உலக முதலாளித்துவ, ஏகாதிபத்திய சக்திகள் பயங்கரவாதம் என்ற பதத்தைப் பாவித்து வருகின்றன. பின்தங்கிய நாடுகளில் கிளர்ந்துள்ள தேசிய விடுதலைப் போராட்டங்கள், சோசலிசப் புரட்சி இயக்கங்கள் போன்ற விடுதலை எழுச்சிகள் எல்லாம் பயங்கரவாதமாகவே சித்தரிக்கப்படுகின்றன. மாவோவிலிருந்து மகாவே வரை, சேகுவாராவிலிருந்து அரபாத வரை, தேசிய சுதந்திர வீரர்கள் எல்லோரும் பயங்கரவாதிகள் எனப் பட்டம் பெற்றவர்களே. உலக முதலாளித்துவ வல்லரசு அணியானது மூன்றாவது உலக நாடுகளின் தேசிய வளங்களையும், தொழிலாக்க சக்தியையும் சுரண்டி வாழ்கிறது, தனது ஆதிபத்தியத்தை சதா நிலை நாட்டி தனது சுரண்டலை சதா நீடிக்கும் வகையில், தனக்குச் சார்பான அடிவருடி அரசுகளுக்கு முண்டுகொடுத்து சுதேச வெகுசனக் கிளர்ச்சிகளை நசுக்குவதே உலக ஏகாதிபத்தியத்தின் சர்வதேசக் கொள்கையாகும். பின்தங்கிய நாடுகளின் அரசியல், பொருளாதார விடுதலையானது உலக முதலாளிய பொருளாதார அமைப்பிற்கே ஆபத்தை உண்டுபண்ணும் என்பதால், ஒடுக்கப்படும் மக்களின் சுதந்திர எழுச்சியை, அவர்களின் நியாயபூர்வமான புரட்சிகரப் போராட்ட வழிமுறைகளை ஏகாதிபத்தியமானது பயங்கரவாதம் என்றே அன்றும் இன்றும் வர்ணித்து வருகிறது. பாலஸ்தீனியர்கள். ஐரீஸ் மக்கள்,



எரித்தியர்கள், நமீபிய மக்கள், கறுப்புத் தென்னாபிரிக்கர், பாஸ்க்மக்கள், கிழக்குத் தீமோரியர், கேட்ஸ் மக்கள், எல் - சல்வடோரியர், மேற்கு சகாரா மக்கள் — இப்படியாக உலகத் தேசிய இனங்களின் ஆயுதம் தரித்த விடுதலைப் போராட்டங்கள் அனைத்திற்கும் பயங்கரவாதம் என்ற முத்திரையே குத்தப்படுகின்றது. இந்த அடிப்படையில் தான் அமெரிக்க ஜனாதிபதி றேகன் உலகத்தேசிய விடுதலைப் போராட்டங்களை ‘ சர்வதேச பயங்கரவாதம் ’ என்று அண்மையில் வர்ணித்ததை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அமெரிக்க ஏகாதிபத்திய சித்தாந்த அகராதியில் பயங்கரவாதம் என்ற பதம் மிகவும் முக்கியமானது. இது தேசிய விடுதலைக்கும், சோசலிசப் புரட்சிக்கும் ஆப்பு வைக்கும் ஆணி வேரான அரசியற் கோட்பாடு. லத்தீன் அமெரிக்க நாடுகளில் காட்டுத் தீ போலப் பரவி வரும் ஆயுதக்கிளர்ச்சிப் போராட்டங்களை அடியொடு அழித்துவிட முயலும் அமெரிக்க அரசின் அதிமுக்கிய சித்தாந்த ஆயுதம். இந்தப் பயங்கரவாதம் என்ற பொய்ப் பிரச்சாரத் திரைக்கு அப்பால், உலக ஏகாதிபத்தியமானது ஆயிரமாயிரம் அப்பாவி மக்களைக் கொன்று குவித்துப் பேயாட்டம் ஆடி வருவது இன்று உலகறிந்த உண்மை.

ஏகாதிபத்திய, காலனித்துவ வல்லரசுகள் மட்டுமன்றி அவற்றிற்கு முண்டுகொடுக்கும் சுதேச முதலாளிய அரசுகளும் சர்வாதிகார ஆட்சியமைப்புக்களும் உள்நாட்டுப் புரட்சிப் போராளிகளைப் பயங்கரவாதிகள் என்றே பழி சுமத்தி வருகின்றன. இந்த ரீதியில் ஸ்ரீலங்கா ஆளும் வர்க்கமானது தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தையும், அவ்விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றுப் பரிணாமத்தில் உதித்த ஆயுதந்தாங்கிய எதிர்ப்பு இயக்கத்தினையும். அவ்வியக்கத்திற்கு முன்னணி வகித்து ஆயுதப் புரட்சிப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் விடுதலைப் புலி

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

களையும், பயங்கரவாதக் கோட்பாட்டின் அடிப்படையில் அணுகும்போது நாம் ஆச்சரியப்படவில்லை. ஏனென்றால், முதலாளிய சித்தாந்தக் கண்ணாடியில் புரட்சிகர சக்திகள் எல்லாம் பயங்கரவாதப் பேயுருவாகத்தான் தெரியும், ஆனால் மார்க்சியத்தைத் தமது புரட்சிகர சித்தாந்தமாக வரித்துக் கொண்ட சிங்கள - தமிழ் இடது சாரி இயக்கங்களும் பயங்கரவாதம் என்ற கோட்பாட்டின் அடிப்படையிலேயே தமிழீழ ஆயுதப் புரட்சி இயக்கத்தையும், அதன் போராட்ட வடிவங்களையும் விமர்சித்து வருவது எமக்கு விந்தையைக் கொடுக்கிறது. மார்க்சியமானது சகல சமூக அரசியல் சக்திகளையும், பொருளுற்பத்தி வடிவங்களையும் வரலாற்றுக் கண்ணோட்டத்தில். அதாவது வரலாற்றுப் பொருள் முதல்வாத, இயங்கியல் தத்துவார்த்த அடிப்படையில் நோக்குவதை நாம் அறிவோம். நிதர்சனமான யதார்த்த பூர்வமான உண்மை நிலைகளை, அவற்றின் தோற்றம், வளர்ச்சி, தாக்கம் என்ற ரீதியில் திண்ணியமாக ஆய்வு செய்யும் அவசியத்தை மார்க்சீச - லெனினிச தரிசனம் வற்புறுத்துகிறது. " Concrete Analysis of Concrete Conditions " என்று லெனின் சதா வலியுறுத்துவதும் இந்த ஆய்வு பற்றியதே. வரலாற்று ரீதியான அரசியல் மெய்யியல்பினை, அதன் நிதர்சனத்தை, அதன் புறநிலை உண்மையை, அது பிரவாகமெடுத்துள்ள முரண்பாட்டுக் களத்தினை, பூரணமாகத் தரிசிக்கத் தவறும் மார்க்சீய வாதிகள், வெகுசனப் போராட்ட சக்திகளையும், அவற்றின் புரட்சிகரத் தன்மைகளையும், புரிந்து கொள்ளப் போவதில்லை. இந்தக் குருட்டுத் தனத்தாலேயே பழைய மார்க்சீயவாதிகள் ஈழத்தமிழரின் தேசிய இனப் பிரச்சனையையோ அன்றி சிங்களப் பேரினவாத சித்தாந்த முரண்பாட்டினையோ செம்மையாகக் கிரகித்துக் கொள்ள முடியவில்லை. இதுவே அவர்களது அரசியல் வீழ்ச்சிக்கு காரணியமாக அமைந்தது. தமிழீழத்தில் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டம் என்பது ஒரு வரலாற்று ரீதியான நிதர்சன



அரசியல் உண்மை, ( Armed Revolutionary Struggle in Tamil Eelam is a Concrete Historical Political Reality ); ஈழத் தமிழரின் தேசிய விடுதலை எழுச்சியின் வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் ஒரு புரட்சிகர சக்தி. இந்த புரட்சிகர அரசியல் போராட்ட சக்தியை அதன் வரலாற்றுப் பரிமாணத்தில், அதாவது ஈழத்தமிழரின் தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்று வளர்ச்சியில் ஆய்ந்தறிந்து கொள்வதை விடுத்து, பயங்கரவாதம் என்ற பிற்போக்கான முதலாளியக் கோட்பாட்டில் விமர்சிக்க விழைவது மார்க்சிய அணுகுமுறை அல்ல. இதனை இன்றைய வலது குறைந்த இடதுசாரிகளும், பிற்போக்குத் தமிழ் அரசியல்வாதிகளும் ரொக்சிசவாதிகளும் உணர்ந்து கொள்வது அவசியம்.

## ஆயுதப் போராட்டத்தின் தோற்றம்

ஒரு அரசியல் போராட்டத்தின் அதியுயர்ந்த கட்டத்தில், அதியுன்னத வடிவமாக எழுவதே ஆயுதப்புரட்சிப் போராட்டமாகும். சமாதான வழி தழுவிய [illegible] சனநாயகப் போராட்ட வடிவங்கள் [illegible] மக்கள் சக்தியை அணிதிரட்டும் ஆன்ம பலத்தை இழக்கும் பொழுது, ஆயுதம் தாங்கிய புரட்சிப் போராட்டம் தவிர்க்க முடியாத சரித்திர நியதியாகி விடுகிறது. தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் வரலாற்று ரீதியில் நாம் ஆய்வு செய்வதில் இந்த உண்மை நன்குபுலனாகும். சிறீலங்கா ஆளும் வர்க்கத்தின் பேரினவாத ஒடுக்கு முறையை எதிர்த்து கால் நூற்றாண்டு காலத்திற்கு மேலாக தமிழ்த் தேசிய இயக்கமானது சமாதான சனநாயக வழி தழுவிய போராட்ட நுணுக்கங்களைக் கையாண்டது. அகிம்சைத் தத்துவத்தின் அடிப்படையில், அமைதி முறையில் வெளிப்பாடு கண்ட வெகுசன எழுச்சிப் போராட்டங்கள் அனைத்தும், சிங்கள ஆயுதப்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

படைகளால் அடக்கியொடுக்கப்பட்டன. அறநெறி அரசியல் பண்புகளுக்கு மதிப்பளிக்காத அரசபயங்கர வாதத்தை அன்பு மார்க்கங்களின் ஆன்மீக பலத்தால் எதிர்கொள்ள முடியாது என்பதைத் தமிழ் மக்கள் உணர்ந்து கொண்டனர். தேசிய சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல காந்தியப் பாணி நடைமுறைச் சாத்தியமற்றது என்பதனைப் புரட்சியுணர்வு பெற்ற புதிய இளைஞர் சமுதாயம் உணர்ந்து கொண்டது. முற்போக்கு வன்முறைக்கு எதிராக மென்முறைப் போராட்டம் பலனளிக்காது என்பதை உணர்ந்து கொண்ட புதிய பரம்பரை புரட்சிகர வன்முறை அரசியலை நாடியது.

வேலை வாய்ப்பின்மை, கல்வி வாய்ப்பின்மை, அந்நிய மொழித்திணிப்பு, அரச படைகளின் அட்டூழியம் இப்படியான சிங்களப் பேரினவாத ஒடுக்கு முறைகளுக்குப் பலிக்கடாவாகிய தமிழ் இளைஞர்கள், தமது எதிர்கால சுபீட்சம் புரட்சிகர அரசியலிலேயே தங்கியிருப்பதை உணர்ந்து கொண்டனர். தேசிய முரண்பாட்டுக்குள் சிக்குப்பட்டிருக்கும் தமிழ்த் தேசிய இனம் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் பிரிந்து சென்று, தனி அரசு அமைப்பதன் மூலமே பூரண விடுதலையைக் காணமுடியும் என்பதைப் புரிந்துகொண்ட அவர்கள், தங்களது சுதந்திர வேட்கைக்கு வெளிப்பாடு காணப் புரட்சிகர அரசியல் வன்முறைப் போராட்டத்தில் குதித்தனர்.

எழுபதின் ஆரம்பகாலகட்டத்தில் தமிழீழத்தில் தலைதூக்கிய அரசியல் வன்முறையானது, கொடூரமான ஒடுக்குமுறையால் எழுந்த தேசிய முரண்பாட்டுக் களத்திலிருந்தே பிரவாகமெடுத்தது. சிங்கள அரச பயங்கரவாதத்திற்குச் சவாலாகப் பிறந்த இவ்வன்முறையை ஈழத்தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் புரட்சிகர வெளிப்பாடாகவும்,

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



அப்போராட்டத்தின் புதுமுக வளர்ச்சியும் தொடர்ச்சியுமாகவே கொள்ளுதல் வேண்டும். இவ்வன்முறையானது, தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் விடுதலைக்கான போராட்டத்தில் ஒரு புதிய புரட்சிகர சகாப்தத்தைப் பிறப்பித்தது எனலாம்.

ஈழத்தமிழ் இளைஞரின் புரட்சிகர வன்முறைப் போராட்டத்தின் தோற்றம்பற்றி, வரலாற்று ரீதியாக ஆய்வு செய்கையில், தமிழ் மாணவர் பேரவையின் முக்கியத்துவத்தையும் அதன் பங்கையும் இங்கு குறிப்பிடுவது அவசியமாகிறது. இந்த அமைப்பே தீவிரமான அரசியல் செயல் வீரர்களையும், புரட்சிகர அரசியல் நடைமுறைக்கான சூழ்நிலையையும் உருவாக்கியது எனலாம். இப் பாரம்பரியத்தில் உருவான மிகச்சிறந்த விடுதலை வீரனே சிவகுமாரன் என்ற இளம் தியாகி. சிங்கள அரச அதிகாரத்தை, குறிப்பாக இவ்வரசின் இயந்திரமான காவல்துறையை எதிர்த்துச் சவால்விட்ட இந்த இளம் தமிழ்ப் புரட்சி வீரன், தனது வீரத்தால் வியப்பூட்டும் துணிச்சலால், விடுதலையுணர்வால் ஒரு வீர காவியத்தையே படைத்தான். அஞ்சா நெஞ்சம் படைத்த இவ்விளைஞன் ஏற்றி வைத்த சுதந்திரச் சுடரானது, அணைக்க முடியாத பெருந் தீயாகத் தமிழீழம் எங்கும் பரவத் தொடங்கியது.

## புலி இயக்கத்தின் பிறப்பு

எழுபதின் ஆரம்பத்தில், தனிப்பட்ட முறையிலும், குழு ரீதியிலுமாகக் கட்டுப்பாடற்ற முறையில் பிரவாகமெடுத்த தமிழ் இளைஞரின் புரட்சிகர உத்வேகமானது, புரட்சிகரக் கொள்கையிலும் நடைமுறையிலும் கட்டி எழுதப்பட்ட இயக்கமொன்றில் வெளிப்பாடு காண விழைந்தது. தமிழ் அரசியல் கட்சிகளோ, அன்றி இடதுசாரி இயக்கங்களோ வளர்ச்சிப் போக்குடைய இளைஞரிடம் புதைந்து கிடந்த

புரட்சிகர சக்திக்கு களம் அமைத்தும் கொடுக்கும் செயற் திட்டம் எதுவும் கொண்டிருக்கவில்லை.

பழைமைவாத முதலாளிய சித்தாந்தத்தினுள் சிக்குண்டு கிடந்த தமிழ்த் தேசியக் கட்சிகள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் எச்சமான பாராளுமன்றத்திற்கு முண்டு கொடுத்து நின்றன. தமிழ்த் தேசியவாதத் தீயைப் பற்றி எரியச் செய்து, விடுதலை இலட்சியம் பற்றி ஆவேசமாக பேசிடினும் தமிழினத்தின் தேசிய சுதந்திரத்திற்கு வழிகோலும் உருப்படியான வேலைத் திட்டம் எதையும் இக்கட்சிகள் முன்வைக்கவில்லை. சோசலிசத் தமிழீழம் என்ற கோசத்தை இவர்கள் முன் வைத்த போதும் சோசலிசப் புரட்சி பற்றி சிறிதளவேனும் சிந்திக்கும் ஆற்றலை அற்றிருந்தனர். மாறாக மத்தியதர முதலாளிவர்க்கத்தின் அபிலாசைகளையே இக்கட்சிகள் பிரதிபலித்தன. இந்த வர்க்க அக்கறை காரணமாக ஒரு தேசிய இனத்தின் விடுதலையை முன்னெடுத்துச் செல்லும் புரட்சிகரத்தன்மை இத்தலைமைப்பீடத்திடம் இருக்கவில்லை. இதன் காரணமாக ஈழத் தமிழினத்தின் விடுதலை எழுச்சி உக்கிரமடையும் போதெல்லாம் ஒடுக்குமுறை ஆட்சியாளருடன் ஒப்பந்தங்கள் செய்து கொள்வதிலும், சலுகைகள் பெறுவதிலுமே கூட்டணித் தலைமை அக்கறை காட்டியது. இதனால் இவர்களது பேச்சுவார்த்தை என்ற புரட்டு ராஜதந்திரம் விடுதலைப் போராட்டத்தைப் பின்னோடுத்துச் சென்றதுடன் தமிழ் பேசும் மக்களைத் தாங்கொணா ஒடுக்குமுறைக்குள் தள்ளியது; பழமை இடதுசாரிக்கட்சிகளோ சிங்களப் பேரினவாத சித்தாந்தத்திற்குள் சிறைப்பட்டுக்கிடந்தன. இதனால் இவர்கள் தமிழரின் தேசிய விடுதலை எழுச்சியின் புரட்சிகரத் தன்மையினைப் புரிந்து கொள்ளும் ஆற்றலை அற்றிருந்தனர். தேசிய ஒடுக்குமுறை என்பது வர்க்கப் போராட்டத்தின் பிரதான எதிரி என்பதையும் இரு இனங்


மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

கள் மத்தியில் எழும் தேசிய முரண்பாடானது வர்க்க ஒற்றுமைக்கு வழிகோலாது என்பதையும் இவர்கள் புரிந்து கொள்ளவில்லை. பேரினவாத சித்தாந்த அழுத்தம் இவர்களது மார்க்சீயப் பார்வையை மந்தமடையச் செய்தது. இதனால் இவர்கள் தமிழ்ப் புரட்சிவாத இளைஞரின் புரட்சிகர அபிலாசைகளை அணி திரட்டும் சக்தியை அற்றிருந்தனர் இப்படியான பெரியதொரு அரசியல் சூனியத்தை எதிர் கொண்டும், அதே வேளை தாங்கொணா ஒடுக்குமுறையால் எழுந்த புரட்சிகர சூழ்நிலையில் சிக்குண்டும் தத்தளித்த தமிழ் இனம் சமுதாயத்திற்கு விடுதலைப் பாதையை முன்னெடுத்துச் செல்லவல்ல புரட்சிகர அரசியல் இயக்கமொன்று அவசியமாயிற்று. இந்தச் சூழ்நிலையிலேயே 1972 இல் எமது இயக்கம் சரித்திர ரீதியாகப் பிறப்பெடுத்தது.

ஆரம்ப காலகட்டத்தில் புதிய தமிழ்ப் புலிகள் என்னும் பெயருடன் இயங்கிய எமது இயக்கத்தில் ஆயுதப் புரட்சியில் அசையாத நம்பிக்கை, அடக்கு முறையை உடைத்தெறியும் ஆவேசம், சமதர்மத் தமிழீழமே தனியரசு இலட்சியம்- இப்படியான உறுதிப்பாடும், செயற்பாடும் கொண்ட இளம் புரட்சிவாதிகள் அணிதிரண்டனர் நகரப்புறக் கெரில்லா அணியான அமைப்பையும், இராணுவக் கட்டுப்பாட்டையும் இரகசியக் கட்டுக்கோப்பையும், போராட்ட முறைகளில் திகைப்பூட்டும் செயற்திறனையும், இலட்சியத்தில் இரும்பையொத்த உறுதியையும் உடைய உறுப்பினர்களைக் கொண்ட எமது இயக்கத்தை ஈழத் தமிழ் மக்களது விடுதலை எழுச்சியின் புரட்சி மையமாகவும், தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஆயுதமேந்திய புரட்சிகர விடுதலை இயக்கமாகவும் அமைத்துள்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கொண்டோம். 1976 இல் எமது இயக்கத்திற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் என்னும் பெயர் சூட்டப்பட்டது எமது இயக்கத்தை ஆரம்பித்து. அதனைக் கட்டுக்குலையாது கட்டுப்பாட்டுடன் கட்டி வளர்த்து வரும் பெருமை எமது தலைவர் பிரபாகரனையே சாரும் இவரே இன்று எமது இயக்கத் தலைவராகவும், தளபதியாகவும் இருந்து கொண்டு இயக்கத்தை வழிநடத்தி வருகிறார்.

1954 ஆம் ஆண்டு கார்த்திகை 26- இல் பிறந்த பிரபாகரன் அவர்கள் வல்வெட்டித்துறை பட்டினத்தைச் சேர்ந்தவர் வரலாற்று ரீதியாகவே வல்வெட்டித்துறை மக்கள் விடுதலையுணர்வும், வீரமிகு பண்புகளும் படைத்தவர்கள். இதனால் இப்பட்டினம் ஆதிக்க எதிர்ப்பு இயக்கத்திற்கு ஒரு தளமாக இருந்து வந்ததுடன் வீரம் செறிந்த தேசிய விடுதலைவீரரையும் உருவாக்கியது இந்தப் புரட்சிகரச் சூழலில் பிறந்த பிரபாகரன் சிறு பிராயத்திலிருந்தே விடுதலையுணர்வும் வீரமும் மிக்கவராகத் திகழ்ந்தார். எழுபதின் ஆரம்பத்தில் சிங்கள இன ஒடுக்குமுறையால் எழுந்த சுதந்திர வேட்கையால் ஈடுபட்ட அவர் தனது பதினாறாவது வயதில் புரட்சிகர அரசியலில் குதித்தார். மிகவும் இளையவர் என்பதால் ஏனைய விடுதலைப் போராளிகள் அவரை 'தம்பி' என்று அன்புடன் அழைத்துக் கொள்வர் கெரில்லாப் போர்முறை போர்யுக்திகளைத் திட்டமிடுவதில் பிரபாகரன் அவர்கள் மிகவும் சாமர்த்தியசாலி. விடுதலைப் புலி இயக்கத்தின் இராணுவ நடவடிக்கைகளைத் திட்டம் தீட்டிக் கொடுப்பவரும் அவரே கெரில்லா வீரர்களுக்கு ராணுவப் பயிற்சியளித்து அவர்களுக்கு இராணுவக் கட்டுப்பாட்டைக் கற்றுக்கொடுத்து, கட்டுக்கோப்பான முறையில் இயக்கத்தை வழி நடாத்திவரும் எமது தலைவர் பிரபாகரன் மிகவும் கண்டிப்பான சுபாவமுடையவர் நேர்மையை மதிப்பவர். பொய்மையை,



போலித்தனத்தை வெறுப்பவர். தனது இயக்கப் போராளிகளிடம் தியாகவுணர்வையும், விடுதலை இலட்சியத்தில் முழுமையான அர்ப்பணிப்பையும் எதிர்பார்ப்பவர். அவரது விடுதலையுணர்வையும், மனோதூய்மையையும், கட்டுப்பாடான அறநெறி வாழ்வையும் அவரது அரசியல் எதிரிகளே பாராட்டத் தவறுவதில்லை. சோசலிசப் புரட்சி வாதியாகிய அவர், ஈழத் தமிழ் மக்களின் தேசிய விடுதலையையும், சமதர்ம சமூக அமைப்பையும் உன்னத இலட்சியமாகக் கொண்டவர்.

## புரட்சிகர சித்தாந்தமும் போர் முறையும்

இன ஒடுக்குமுறையால் எழுந்த சமூக அரசியல் பொருளாதார புறநிலைகள் தமிழ்த் தேசியவாத, எழுச்சியை ஈழத் தமிழரிடையே வலுப்பெறச் செய்தன. ஆரம்பத்தில் அதே தேசியவாதத்தால, தேசாபிமானத்தால் உந்தப்பட்டு ஆயுதப் போராட்டத்தில் குதித்த நாம், காலப்போக்கில் ஒரு புரட்சிகர சித்தாந்தத்தையும், அதனால் நெறிப்படுத்தப்பட்ட கொள்கைத் திட்டம், செயற்திட்டத்தின் முக்கியத்துவத்தையும், அவசியத்தையும், உணர்ந்துகொண்டு, ஒரு விடுதலை இயக்கத்தை கட்டுக்கோப்பாக அமைத்து, ஒரு புரட்சிகர கொள்கைத்திட்டத்தை நெறிப்படுத்துவதற்கும், நாம் வரித்துள்ள ஆயுதப் போராட்ட வடிவங்களுக்கு வலுவேற்றி தேசிய விடுதலையுடன் சோசலிசப் புரட்சியையும் முன்னெடுத்துச் செல்லவும், மார்க்சிய - லெனினிய தத்துவத்தை இன்றியமையாததாக ஏற்றுக் கொண்டோம், இந்த அரசியல் விழிப்புணர்வால் நாம் புரட்சிகர சோசலிசத்தை எமது புரட்சிச் சித்தாந்தமாக வரித்துக்கொண்டோம்.

தமிழீழ ஆவணகம்
Tamileelam Archive

புரட்சிகர சோசலிச தரிசனத்தை நாம் ஒரு சமூக விஞ்ஞானமாகவே கொள்கின்றோம். எமது .சமுதாய அமைப்பை வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் அணுகி, அதன் பொருளுற்பத்தி வடிவத்தினை செம்மையாக ஆய்ந்தறியவும், எமது சமூகத்தில் நிலைகொண்டிருக்கும் வர்க்க, சாதி முரண்பாடுகளின் சிக்கலான பரிமாணங்களை திண்ணியமாகப் படித்தறியவும், முக்கியமாக, எமது சமூக அமைப்பை மாற்றியமைத்துப் புதியதொரு புதுமையான சமுதாயத்தை கட்டியெழுப்பவும் சோசலிசத் தத்துவம் இன்றியமையாததாகும்.

சோசலிசத் தமிழீழம் என்ற எமது அரசியல் கொள்கைத் திட்டம் இருமுகப் போராட்ட இலக்குகளை ஒன்றிணைத்த புரட்சித் திட்டமாக அமையப்பெற்றது, தேசிய முரண்பாட்டில் சிக்குப்பட்டிருக்கும் தமிழ்த் தேசிய இனம் முதலில் ஒடுக்குமுறை அமைப்பிலிருந்து அரசியல் ரீதியாக விடுபடுவது அத்தியாவசியமாதலால் தேசிய விடுதலைப் போராட்டம் முதன்மை பெறுகிறது. எனினும், ஒரு தேசிய இனம் அரசியல் ரீதியாக மட்டும் விடுதலையடைந்து இறைமையைப் பெற்றெடுத்தால் மாத்திரம் அவ்வின மக்கள் பூரண சுதந்திரம் அடைந்ததாகக் கொள்ள முடியாது. சமூக ஏற்றத்தாழ்வு. பொருளாதாரச் சுரண்டல்கள் வர்க்க முரண்பாடுகள். சாதி வேறுபாடுகள் நிறைந்ததும் பழமையில் புதைந்து கிடப்பதுமான ஒரு சமுதாயம் தனியரசு அமைத்துக் கொண்டாற்போல மக்களுக்கு விடிவு பிறந்து விடப்போவதில்லை, காலனித்துவத்திலிருந்து "விடுதலை" பெற்றுத் தனியரசு அமைத்துக் கொண்ட மூன்றாவது உலக நாடுகள் பல இன்று சர்வாதிகார ஆட்சியமைப்பிலும் முதலாளியச் சுரண்டலிலும் சிக்குப்பட்டு திண்டாடுவது உலகறிந்த உண்மை, எனவே, தேசிய விடுதலைப போராட்ட இலக்குடன். தமிழ் பேசும் தொ

JAFFNA



லாளா, விவசாய வர்க்கத்தின் சமூக. பொருளியல் சுபீட்சத்திற்கு வழிகோலும் சோசலிசப் புரட்சியும் ஒன்றிணைத்ததாக எமது கொள்கைத் திட்டம் நெறிப்படுத்தப்பட்டிருக்கிறது. சுருங்கக் கூறின் எமது அரசியற் செயற்திட்டமானது சகல மனித சுதந்திரங்களுக்கும் மேம்பாடளிக்கும் ஓர் உன்னதமான சமத்துவ சமுதாய புனர்நிர்மாணத்தை இலக்காகக் கொண்டது. மனிதனை மனிதன் சுரண்டி வாழும் அதர்மமான அமைப்புகளை அகற்றி, தமிழீழத்தை ஒரு செல்வம் கொழிக்கும் சுதந்திர பூமியாக உருவாக்குவதே எமது அரசியல் இலட்சியமாகும்,

சிங்கள ஆயுதப்படைகளால் முற்றுகையிடப்பட்டு, இனக் கொலைத் திட்டத்திற்கு இலக்காகியுள்ள ஈழத் தமிழினத்தின் தேசிய சுதந்திரத்தை வென்றெடுப்பது, சமாதான சனநாயக வழி தழுவிய போராட்டங்களால் சாத்தியமாகாது. இது தமிழ்ழ அரசியல் வரலாறுபகரும் உண்மை. சனநாயகப் போராட்ட வடிவங்கள் தோல்வி கண்டு, வேறெந்த வழியிலும் சுதந்திரத்தை வென்றெடுக்க முடியாத நிலையில், ஒடுக்கப்படும் மக்கள் புரட்சிகர ஆயுதப் போராட்டத்தைத் தழுவிக் கொள்வது தவிர்க்க முடியாதது. இது மார்க்சீய லெனினிய புரட்சி அரசியலுக்குப் புறம்பான பாதை அல்ல. வரலாற்று ரீதியான யதார்த்த புறநிலைகளை அனுசரித்து, அந்தந்த நாடுகளில், அந்தந்த மக்கள் தமது போராட்டவடிவங்களை நெறிப்படுத்திக் கொள்கின்றனர். உலக தேசிய இனங்களின் சமீப கால சுதந்திரப் போராட்ட வரலாறுகளை ஆய்வு செய்கையில் இது புலனாகும். இதன் அடிப்படையில். எமது தேசிய விடுதலைப்போராட்டத்தின் வளர்ச்சியையும், அதன் பரிமாணங்களையும் யதார்த்த சூழ்நிலைகளையும் நன்கு பரிசீலனை செய்தே ஆயுதப் போராட்டத்தை நாம் முன்னெடுத்துச் செல்கிறோம்,

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

நாம் தேர்ந்துள்ள கெரில்லாப் போர்முறைத் திட்டமானது ஒரு வெகுசனப் போராட்ட வடிவம் என்பதை சோசலிசத் தத்துவம் ஏற்றுக் கொள்கிறது, அந்நியப் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டு அதர்மமான ஆட்சிக்கு ஆளாகும் ஒரு மக்கள் கூட்டம் தேசிய ரீதியான எதிர்ப்பாக (National Resistance) கெரில்லா போர்முறையைக் கையாளுவதை மார்க்சும் வரவேற்கவே செய்தார். ஆயுதப் போராட்டமானது, ''சோசலிசத்தின் விழிப்பூட்டுவதும் அணி திரட்டுவதுமான ஆற்றலால் மேம்பாடுபடுதல் அவசியம்'' என்றார் லெனின். ஒரு புரட்சிகர சூழ்நிலையில் தனது புரட்சி இலக்கை அடைய பாட்டாளி வர்க்கமானது ஆயுத பலாத்காரத்தில் குதிக்க வேண்டியதன் அவசியத்தை மார்க்சீகய லெனினியம் வலியுறுத்தவே செய்கிறது. அக்டோபர் புரட்சியில் ரஷ்ய தொழிலாளர் வர்க்கம் ஆயுதக் கிளர்ச்சி மூலமே அரச இயந்திரத்தை முறியடித்தது ஆயினும். ஆயுதப் போராட்டத் தன்மையும், அதன் பரிமாணங்களும் சோசலிசப் புரட்சியிலும் தேசியவிடுதலையிலும் வேறுபட்டவை என்பதை நாம் உணர வேண்டும். ரஷ்ய சோசலிசப் புரட்சியில் உருவகம் கொண்ட வெகுசன ஆயுதக் கிளர்ச்சியும் தேசிய விடுதலையை உள்ளடக்கிய சீனப் புரட்சியில் ஆயுதப் போராட்டம் எடுத்த வடிவங்களும் இதற்கு உதாரணமாகின்றன. மாவோ சுட்டிக்காட்டுவது போல ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்திற்கும் வர்க்கப் போராட்டத்திற்கும் இடையில் வேறுபாடுண்டு, ''முன்னதில் ஒரு தேசத்தின் சகல மக்களும் வர்க்க, கட்சி வேறுபாடின்றி தேசிய விடுதலைச் செயல் திட்டத்தின் அங்கமாகிய கெரில்லாப்போரை முன்னின்று நடத்துவர். எனவே வர்க்கப் போராட்டத்துடன் ஒப்புநோக்கின் இதன் அடித்தளம் மிகவும் பரந்தது'' என்கிறார் மாவோ. சீன, ரஷ்ய புரட்சிகள் ஒரு புறமிருக்க, சமீபகால தேசிய விடுதலைப் போராட்டங்களும், அவற்றில் வெளிப்பாடு கண்ட ஆயுதப்



போராட்டவடிவங்களும், கெரில்லாப் போர் முனைத்திட்டம் பற்றி மார்க்சிய சிந்தனையில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தத் தவறவில்லை, ''கியூபாப்புரட்சி, லத்தீன் அமெரிக்க வெகுசனப் போராட்டம் பற்றிய பழைய சித்தாந்தத்தில் புரட்சிகரமான சிந்தனையைத் தூண்டி விட்டது. கெரிலலாப் போராட்டத்தின் மூலம் ஒரு அடக்குமுறை ஆட்சியிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ளும் மாபெரும் சக்தி மக்களுக்கு உண்டு என்பதை கியூபாப் புரட்சி தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டியது'' என்கிறார் சேகுவாரா. சமீபத்திய கறுப்பு ஆப்பிரிக்கர்களின் தேசிய விடுதலைப் போராட்டங்களை எடுத்துக் கொண்டாலும் ஆயுதப் போராட்டமானது மக்களை அணி திரட்டும் வெகுசன போராட்ட சக்தியாக உறுப்பெற்று காலனித்துவத்தை முறியடித்ததை நாம் கண்டு கொள்ளலாம் காலனித்துவத்திற்கு எதிரான கறுப்பர்களின் போராட்டங்கள்பற்றி பனன் (Frantz Fanon) குறிப்பிடுகையில், ''தன்முறைப் போராட்டமானது இம்மக்களை ஒரு முழுமையில் ஒன்றுபடுத்தியது. ஏனென்றால், இவர்கள் தனிப்பட்ட நபர்களாக வன்முறைப் பிணைப்பால் ஒரு மாபெரும் சங்கிலித்தொடர்பில் இணைக்கப்பட்டிருக்கின்றனர். ஆரம்பத்திலிருந்தே ஆக்கிரமிப்பாளனின் வன்முறை காரணமாக உருவகம் பெற்ற ஒரு பாரிய பலாத்கார உயிரமைப்பில் இவர்கள் ஒரு அங்கமாக இயங்கி வந்தனர். இந்தப் பிணைப்பால் ஒவ்வொரு குழுவும் ஒன்றை ஒன்று இனம் கண்டு கொண்டது. இதனால், எதிர்கால தேசம் ஏற்கனவே ஐக்கியப்பட்டிருந்தது. ஆயுதப் போராட்டமானது, மக்களை அணிதிரட்டும் வல்லமை பெற்றது. ஏனென்றால், அது மக்களை ஒரே இலக்கில் இட்டுச் செல்லும் சக்தி வாய்ந்தது.''

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வெகுசன ஆதரவின்றி ஒரு சிலர் மாத்திரம் ஆயுதம் ஏந்திப் போராடிக் கொண்டிருந்தால் மட்டும் அப்போராட்டமானது தேசிய விடுதலைக்கோ அன்றி சோசலிசப் புரட்சிக்கோ வழிகோலப் போவதில்லை என்பது எமக்குத் தெரியாதது அல்ல. ஆயுதப் போராட்டமானது அணிதிரண்ட மக்கள் சக்தியாக வெகுசன ஆயுதக்கிளர்ச்சியாக விரிவடையும் முக்கியத்துவத்தையும், அவசியத்தையும் நாம் உணர்ந்து செயற்படுகிறோம். ஆகவே, புரட்சிகர வன்முறை தழுவிய எதது போராட்டமானது வெகுசன இயக்கத்திற்கு மாறாக எவ்விதத்திலும் அமையவில்லை. ஆயுதம் தாங்கிய புரட்சிப் போராட்டத்தை மக்கள் மத்தியில் நிலைப்படுத்தி, அதற்கு ஆதரவாக வெகுசனத்தை அணிதிரட்ட வேண்டும் என்பதே விடுதலைப் புலி இயக்கத்தின் செயற்திட்டமாகும். ஒன்று திரண்ட மக்கள் சக்தியின் மாபெரும் வல்லமையால் தான் எதையும் சாதிக்க முடியும், எமது ஆயுதப் புரட்சிப் போராட்டமானது ஒரு மக்கள் யுத்தமாக உயர்நிலை எய்தும் என்பதில் எமக்கு அசையாத நம்பிக்கையுண்டு; எனவே. கெரில்லா வடிவமான எமது ஆயுதப் போரைத் தேசிய விடுதலை தழுவிய வெகுசன ஆயுதப் போராட்டமாக வலுவடையவும், விரிவடையவும் செய்வதே எமது அரசியல், இராணுவ போர் முறைத் திட்டத்தின் அடித்தள நோக்கமாகும்.

எமது இயக்கத்தின் ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளே இன்றைய சிங்கள இனவாத அரசை ஆட்டம் காணச் செய்கிறது. சிறீலங்காவின் பொருளாதாரமும் என்றுமில்லாத நெருக்கடியை எதிர்நோக்கியிருக்கிறது. எமது ஆயுதப் போராட்டத்தின் விளைவாக, இன்று தமிழீழத்தில் சிங்கள அரசின் சிவில் நிர்வாக அமைப்பு சீர்குலைந்திருக்கிறது. போலீஸார் மீது நாம் தொடராக நடத்திய



தாக்குதல்களால் வடபகுதி ரகசிய போலீஸ் சேவை நிர்மூலமாக்கப் பட்டதுடன் போலீஸ் நிலையங்கள் மூடப்பட்டு, போலீஸ் நிர்வாக சேவையே ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. எமது கெரில்லா போராட்டமானது சிங்கள இராணுவ அமைப்பிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தத் தவறவில்லை. தமிழீழத்தில் சிங்கள இராணுவம் பதட்ட நிலையடைந்து, கட்டுப்பாடு குலைந்து, பலவீனமடைந்திருப்பது எமது தொடர்ச்சியான கெரில்லாத் தாக்குதல்களின் நேரடி விளைவேயாகும். சதா பலமடைந்து, விரிவடைந்து வரும் எமது விடுதலை இயக்கமானது இன்று சிங்கள ஆட்சியாளருக்கு ஒரு சிம்ம சொற்பனமாக விளங்கி வருகிறது. எமது கெரில்லா அணிகளை மேலும் விரிவடையச் செய்து, ஒரு பலம் வாய்ந்த மக்கள் விடுதலை இராணுவத்தை கட்டி எழுப்பும் இலக்கில் நாம் இன்று செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம். சொந்த மண்ணிலேயே அனாதைகளாக்கப்பட்டு அனாதரவாகி அல்லற்படும் எமது மக்களுக்கு பாதுகாப்பளிப்பதாயின் ஒரு தேசிய விடுதலை இராணுவத்தை உருவாக்குவதோடு மக்களுக்கும் பயிற்சி அளித்து, ஆயுதம் தரிப்பது அத்தியாவசியமாகிறது. சமீபத்திய இனவெறியாட்டம் சிங்கள ஆளும் வர்க்கம் தீட்டிய இனக்கொலைத் திட்டத்தின் மிகக் கொடூரமான வெளிப்பாடாகும். இத்தகைய பேரிழப்புகளுக்குப் பின்னர், இத்தகைய உயிர்ச் சிதைவுகளுக்குப் பின்னர், இத்தகைய மனிதாபிமானமற்ற கொடுமைகளுக்குப் பின்னர் எந்தவொரு தன்மானமுள்ள தமிழனும் ஒற்றையாட்சியின் கீழ் சிங்கள இனத்துடன் ஒன்றுபட்டு வாழ்வதை விரும்பப் போவதில்லை. தனியரசு அமைத்து தன்மானத்துடன் வாழ்வதைத் தவிர எமக்கு வேறுவழி ஒன்றுமில்லை. சமரசப் பேச்சுக்கள் என்றும், சமஷ்டி என்றும், சலுகைகள் என்றும் மீண்டும் சிங்கள இனவாத அரக்கனின் மாயைக்குள் சிக்க எமது மக்கள் தயாராக இல்லை.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக திரும்பத் திரும்ப ஏமாற்றப்பட்டு நசுக்கப்பட்ட வரலாற்று அனுபவததிலிருந்து இனி நாம் சிங்கள ஆட்சியாளரை ஒருபோதும் நம்பப்போவதில்லை. அப்படி நம்புவதும் எமது இனத்தின் அழிவிற்கே வழி வகுக்கும்.

## கெரில்லாப் போர் ஒரு மக்கள் யுத்தம்

உலக விடுதலைப் போராட்டங்கள் பகரும் வரலாற்று உண்மைகளைக் கற்றறிந்து, சோசலிசத் தத்துவத்தின் புரட்சி இலட்சியத்தைத் தழுவிக்கொண்டு, எமது மக்களின் தனித்தன்மை பெற்ற விடுதலைப் போராட்டங்களின் சிக்கலான பரிமாணங்களை நன்கு புரிந்து கொண்டே நாம் ஆயுதப் புரட்சிப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கிறோம். இதனைப் புரிந்து கொள்ளாத சிங்கள–தமிழ் இடது சாரி இயக்கங்களும், சில விடுதலைக் குழுக்களும் எமது போர் முறைத் திட்டத்தையும், போராட்ட வடிவத்தையும் பயங்கரவாதம் என விசமத்தனமாக விமர்சனம்செய்து புரட்சிகர இளைஞர்களைக் குழப்பி வருகின்றனர். போல்சேவிக் புரட்சிக்கு முந்திய காலகட்டத்தில் ரஷ்யாவில் தோன்றிய தனிப்பட்ட கொள்ளைக் கோஷ்டிகள், அராஜகக் குழுக்களை லெனின், ரொட்ஸ்கி. போன்றோர் பயங்கரவாதிகள் எனச் சாடியதை உதாரணமாகக் கற்பித்து இந்த இடதுசாரிகளும் எம்மையும் அந்தப் பேயுருவமாக உருவகப்படுத்த விழைகின்றனர். இந்தத் தோழர்களுக்கு நாம் தெட்டத் தெளிவாக சொல்ல விரும்புவது இதுதான். தமிழீழ அரசியல் வரலாற்றில் பரிணாமம் பெற்ற ஆயுதப் போராட்டத்தை ஒரு புரட்சிகர அரசியல் போராட்டச் சக்தியாக ஏற்றுக் கொள்ள மறுக்கும் நீங்கள். அவ்வரலாற்று ஓட்டத்தில் பிறப்பெடுத்த எமது இயக்கத்தின் விடுதலை இலட்சியம், போராட்டப்பாதை, போர் முறைகளைப் பயங்கரவாதக் கோட்பாட்டின் கீழ் திரித்துக்காட்ட விழைவது வரலாற்று விஞ்ஞானமாகிய மார்க்சீயக் கண்ணோட்டத்திற்கு முற்றிலும் மாறானதாகும். தமிழீழத்தில் அரச நிர்வாகத்தை நிலை குலையச் செய்து, அரச ஆயுதப் படைகளை எதிர் கொண்டு தாக்கி அந்தக் கூலிப்பட்டாளத்தை கிலி கொள்ளச் செய்து அவர்களைத் தமிழ் மண்ணிலிருந்து விரட்டியடிக்கும் நோக்கில் செயற்படும் எமது நகரப்புறக் கெரில்லா யுத்த நடவடிக்கைகளையும், அவை இராணுவ ரீதியில் எமது நீண்டகால புரட்சிப் போர் முறைத் திட்டத்தின் வழி முறையாக நிறைவேற்றப் படுவதையும் 'தனிநபர் பயங்கரவாதம்' என்ற களங்கம் படிந்த அரசியற் கண்ணாடிக்குள் சதா பார்த்துக் கொண்டிருந்தால் தமிழீழ விடுதலை எழுச்சியின் யதார்த்த புரட்சிகரத் தன்மைகளையும், அவற்றின் வரலாற்றுப் போக்கையும், வளர்ச்சியையும் நீங்கள் புரிந்து கொள்ளப் போவதில்லை.



வேறு சிலர் எமது கெரில்லாப் போராட்ட முறையை மக்கள் பேராட்டத்திற்கு மாறுபட்டதாக சித்தரிக்க முயல்கிறார்கள். ஆனால் கெரில்லாப் போராட்டம் என்பதே ஒரு வெகுசனப் போராட்ட வடிவம் என்பதை இவர்கள் புரிந்து கொள்ளவில்லைப் போலும், சேகுவாரா சொல்கிறார் ''இங்கு முக்கியமாகக் குறிப்பிட வேண்டியது என்னவென்றால். கெரில்லாப் போராட்டம் என்பது ஒரு மக்கள் யுத்தம், ஒரு வெகுசனப் போர். கெரில்லா அணியானது மக்களின் போராட்ட முன்னணிப் படை: மக்களின் ஆயுத மையக் கரு'' இந்தக் கெரில்லா அணி தனது பெரும் பலத்தை மக்களிடமிருந்தே பெறுகிறது. ஆட்பலம், ஆயுத பலத்தில் பின்தங்கிய நிலையில் இருந்தாற்போல ஒரு கெரில்லா அணி இராணுவத்தை

விடப் பலம் குன்றியது எனக் கருதிவிடக்கூடாது. ஒரு சில ஆயுதங்களை மட்டும் வைத்திருப்பினும் கெரில்லா யுத்தத்தில் ஈடுபட்டிருப்போருக்குப் பக்கபலமாகப் பெரும் பான்மை மக்களின் ஆதரவு இருந்து வரும்.''

பொது மக்களுக்கும் கெரில்லா இராணுவத்திற்கும் மத்தியில் நிலவ வேண்டிய உறவுமுறை பற்றி மாவோ பின் கண்டவாறு சொல்கிறார்: ''இங்கு நாம் மக்களை நீருக்கும் கெரில்லாக்களை அதில் வாழும் மீனுக்கும் ஒப்பிடலாம். நீரும் மீனும் ஒருமித்து இருக்க முடியா தென எப்படிக் கூறலாம்? ஒழுக்கமற்ற இராணுவமே மக்களைப் பகைத்துக் கொள்ளும். இவ்வகை இராணுவம் நிலத்தில் விழுந்த மீன் துடித்து மாள்வதைப்போல் மடிந்து விடும்.''

எமது போராட்டம் ஒரு மக்கள் போராட்டம். நாம் போராடுவது எமது மக்களுக்காக எமது மக்களின் விடுதலைக்காக விமோசனத்திற்காக, நாம் எவ்வகையிலும் மக்களிடமிருந்து அந்நியமாக இருக்கவில்லை, நாம் மக்களோடு சங்கமமாகியிருக்கிறோம். மக்களின் விடுதலை வேட்கையின் வெளிப்பாடாகப் பிறந்த விடுதலை வேங்கைகள் நாம். ஆத்திரமடைந்த எமது மக்களின் இதயக்கொதிப்பே எமது கையில் ஆயுதங்களாக உருவெடுத்துள்ளன எனவே, எமது போராட்டமானது மக்கள் போராட்டமன்றி வேறொன்றுமல்ல.

மூன்றாவது உலக நாடுகளில் வெற்றியீட்டிய தேசிய விடுதைலப் போராட்டங்கள் அனைத்தும் கெரில்லாப் போர் முறை வடிவம் எடுத்தே பின்னர் வெகுசன ஆயுதப் போராட்ட பரிணாமம் பெற்றவை என்பதை இந்த தோழர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.



ஆயுதப் பேராட்டம் என்பது அந்தந்த நாடுகளின் அந்தந்தப் பிராந்தியங்களின் யதார்த்த புறநிலைகளுக்கேற்ப, குறிப்பாக பூகோள, சமூக சூழ்நிலைக்கேற்ப நெறிப்படுத்தப்படுகிறது. எமது கெரில்லாப்போர் முறையானது வெளிநாட்டுப் பாணிகளில் திணிக்கப்படாது, எமது தேசிய யதார்த்த சூழ்நிலைக்கேற்பவே வரிக்கப்பட்டிருக்கிறது. நீண்டகாலப் போராட்ட அனுபவம் வாயிலாக, இறுக்கமான இரகசிய அமைப்புக்களை ( Underground cells ) தமிழீழம் எங்கும் உருவாக்கி கெரில்லா யுத்தத்திற்கான அடித்தளத்தை நிறுவியுள்ளது எமது புரட்சி இயக்கமேயாகும். எமது கெரில்லா அணிகள் மேலும் விஸ்தரிக்கப்படுமிடத்து அவை ஒரு மக்கள் விடுதலை இராணுவமாக உருப்பெறும். போராட்டக் களத்தில் பிறந்து, போராட்டக் களத்தில் வளர்ந்து, போராட்ட நுட்பங்களில் நேரடி அனுபவம் பெற்ற போர் மறவர்களே எமது கெரில்லா அணிகளில் அங்கத்துவம் வகிக்கிறார்கள். நாமே எமது வீரர்களுக்கு எல்லா வகையான இராணுவப் போர் முறைகளிலும் போர் யுத்திகளிலும் பயிற்சி அளிக்கிறோம் எந்தவொரு வெளிநாட்டுக் கெரில்லாப் பயிற்சியும் எமது இராணுவப்பயிற்சிக்கு ஈடுகொடுக்க முடியாது. ஏனென்றால் நாம் எமது மண்ணின் வாசனை அறிந்தவர்கள், எதிரியை நன்கு புரிந்தவர்கள். நாம் நிறுவிய அடித்தள அமைப்புக்களிலிருந்தே ஒரு தேசிய விடுதலை இராணுவம் உருவாகும் என்பதை இன்று தமிழ் இளம் சமுதாயம் நன்கு உணர்ந்திருக்கிறது. அதனாலேயே தமிழ் இளைஞர்கள் இன்று எமது புரட்சி இயக்கத்தின் தலைமையின் கீழ் அணிதிரண்டு வருகிறார்கள்.

## பயங்கரவாதிகள் யார

ஈழத் தமிழினத்தின் சுதந்திரப் போராட்டத்தை முறியடிக்கும் நோக்குடன், எமது விடுதலை இயக்கத்தைநாசம் செய்யும் இலக்குடன் எமது முதலெதிரியான சிங்கள ஆளும்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வர்க்கத்துடன் ஒன்றிணைந்து எமது இனத்தைக் காட்டிக் கொடுக்க விழைந்த காக்கை வன்னியர்களையும், எட்டப்பர்களையும் நாம் அழித்திருக்கிறோம். இனத்துரோகிகளையும், காட்டிக்கொடுக்கும் கயவர்களையும் வாழ விட்டு நாமும் அழிந்து எமது இனமும் அழிய வேண்டுமா? எத்தனையோ ஆண்டுகளாய் இரத்தஞ்சிந்திக்கட்டிவளர்த்த எமது சுதந்திரப் போராட்டம் ஆயிரமாயிரம் உயிர்களைத் தியாகம் செய்த எமது இன விடுதலை எழுச்சி, ஓரிரு ஈழத் தமிழர்களால் நாசமாக்கப்படுவதை நாம் அனுமதிக்கலாமா? இத்துர்ப்பாக்கிய நிலையிலிருந்து தமிழினத்தைத் தற்காத்து விடுதலைப் போரை முன்னெடுத்துச் செல்ல இந்த எதிர்ப் புரட்சி சக்திகளை எதிர்த்துப் போராட வேண்டிய துயர நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். எமது இந்த நிலைப்பாட்டை எமது மக்கள் என்றுமே ஆதரித்து வந்துள்ளனர்.

புரட்சி அரசியலுக்குப் புறம்பாக இருந்துகொண்டு, தமது சொந்த வயிறுகளைக் கழுவும் நோக்கில் மக்களைச் சுரண்டி வாழ்ந்த சமூக விரோதிகளையும், தனிநபர் பயங்கரவாதக் கும்பல்களையும் நாம் கண்டித்தும் இருக்கிறோம். இந்த சமூக விரோதக் காடையர்களிடமிருந்து எமது மக்களைக் காப்பதை எமது புரட்சிப்பணிகளில் ஒன்றாகவே கொள்கின்றோம். இந்த இலட்சியத் தூய்மையும் தியாகவுணர்வும் காரணமாகவே மக்கள் சக்தி எமக்குப் பக்க பலமாக அணிதிரண்டு வருகிறது.

எமது இந்த சமூக சீர்திருத்த நடவடிக்கைகளை இனத் துரோக ஒழிப்பு நடவடிக்கைகளை ஒரு சில அரசியல் குழுக்கள் 'தனிநபர் பயங்கரவாதம்' என்று விஷமப் பிரச்சாரம் செய்து வருகின்றன.



பயங்கரவாதம் என்ற பதத்தைப் பாவித்து நீங்கள் எம்மைப் பரிகாசம் செய்யும்போது, அது சிங்கள ஆளும் வர்க்கத்தின் பிற்போக்கான இனவாதப் பிரச்சாரத்திற்கு வலுவூட்டி வருகிறது என்பதை நீங்கள் உணரவில்லைப் போலும்! உங்களது இந்தப் பிரச்சாரமானது, அரச பயங்கரவாத அட்டூழியங்களைத் திசை திருப்பச் செய்து, எமது மக்களின் விடுதலை எழுச்சிக்கே மாசு கற்பிப்பதாக அமைந்து விடுகிறது. முற்போக்கு அரசியலைத் தழுவிக்கொண்டதாகக் கூறிக் கொள்ளும் நீங்கள் ஒரு முதலாளிய கொடுங்கோன்மை அரசின் ஒடுக்குமுறை அட்டூழியங்களைப் பயங்கரவாதம் எனச் சித்தரித்துக்காட்டாமல் அந்த அரசுக்கு எதிரான எமது ஆயுதப் போராட்டத்தை, மட்டும் பயங்கரவாதம் எனப் பட்டஞ்சூட்ட விழைவதுஎமக்கு, வேதனையைக் கொடுக்கிறது. ஆனால், பயங்கரவாதம் எங்கிருந்து உண்டாகிறது, எந்தெந்த வடிவங்களில் வந்து சேர்கிறது, இந்தப் பயங்கரமான பூதத்தை தமிழினத்தின் மீது கட்டவிழ்த்துவிட்டவர்கள் யார், அதன் கோரத்தாண்டவத்தின் கொடுமைகள் என்ன— என்பதை எல்லாம் எமது மக்கள் அறியாமல இல்லை நாளாந்தம் வீதியில் எதிர் கொள்ளும் பயங்கரவாதப் பேய்களை அவர்கள் இனங்காணத்தான் செய்கிறனர். பயங்கரவாதக் கொடூரங்களின் இரத்தம் படிந்த வடுக்கள், அவர்களது ஆன்மாவின் ஆழம்வரை புரையோடிக்கிடக்கின்றன.

அரசியல் வன்முறை இருவகைப்பட்டது. ஒன்று பிற்போக்கானது. மற்றது புரட்சிகரமானது. ஒன்று அடக்குமுறையையும் அடிமைத்தனத்தையும் நீடிப்பது. மற்றது விடுதலைக்கும் விடிவிற்கும் வித்திடுவது. ஒன்று ஒடுக்குவோரின் ஆயுதம், மற்றது ஒடுக்கப்படுவோரின் ஆயுதம், ஒடுக்குவோரின் பிற்போக்கான, அதர்மமான, அடக்குமுறையான வன்முறையே பயங்கரவாதம் ஆகும் ஒடுக்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கப்படுவோரின் முற்போக்கான, தர்மமான, விடுதலையை நோக்காகக் கொண்ட வன்முறையானது, பயங்கரவாதம் ஆகாது. அது பயங்கரவாதத்திற்கு எதிரான புரட்சிகர வன்முறைப் போராட்டம் ஆகும். வன்முறை என்பது முரண்பாட்டு நியதியின் இருதுருவ எதிர்ச்சக்திகளைக் கொண்டது. ஒன்று அழிவையும் மற்றது ஆக்கத்தையும் குறிப்பது, ஒன்று பயங்கரவாதத்தையும் மற்றது சுதந்திரத்தையும் குறிப்பது. சுதந்திரத்தை இலட்சியமாக வரித்து அதர்மத்திற்கு எதிராகத் தொடுக்கப்படும் வன்முறை தர்மமானது இந்தப் பரிமாணத்தில் வன்முறையானது அடிப்படையான மனித உரிமைகளை நிலைநாட்டும் நீதியின் ஆயுதமாகிறது.

சிங்கள ஆளும் வர்க்கமும், அதன் கூலிப் பட்டாளமும் காட்டுமிராண்டிக் கும்பல்களும் எமது மக்கள் மீது கட்டவிழ்த்து விட்ட வன்முறையே பயங்கரவாதமாகும்.

அப்பாவிகளான எமது மக்களை வெட்டிக் கொல்வதும் சுட்டுக் கொல்வதும், உயிரோடு தீயிட்டுக் கொல்வதும் பயங்கரவாதம்.

எமது தாய், சகோதரிகளைக் கற்பழித்துக் களங்கப்படுத்துவது பயங்கரவாதம்.

எமது கோவில்களைக் கொளுத்துவதும், நூலகங்களை எரிப்பதும், பத்திரிகைக்காரியாலயங்களை தீக்கிரையாக்குவதும். பயங்கரவாதம்.

எமது கடைகளைக் கொழுத்துவதும், கொள்ளையடிப்பதும் சந்தைகளைத் தீமூட்டி எரிப்பதும் பயங்கரவாதம்.



எமது இளைஞர்களைச் சதா வேட்டையாடுவதும், அவர்களைச் சிறைவைத்து, சித்திரவதை செய்து கொல்வதும் பயங்கரவாதம்.

வெறியர்களைக் கட்டவிழ்த்துவிட்டு விலங்கிடப்பட்டிருந்த வீர விடுதலைப் போராளிகளைச் சிறைக்குள் வைத்து. கொடூரமாகக் கொலை செய்தது பயங்கரவாதம்.

வீடுகளுக்குள் புகுந்து எமது மக்களை வீம்பு செய்வதும் வீதியில் நடமாடுபவர்களை விரட்டி அடிப்பதும். பயணம் செய்பவர்களை வழிப்பறி செய்வதும் பயங்கரவாதம்.

மனித உரிமைக்குக் குரல் கொடுத்த மதகுருமாரையும் கல்விமான்களையும் சிறையில் வைத்துச் சித்திரவதை செய்வது பயங்கரவாதம்.

குடியுரிமையைப் பறிப்பதும். மொழியுரிமையைப் பறிப்பதும் கல்வியுரிமையைப் பறிப்பதும், கலாச்சார உரிமையைப் பறிப்பதும், பாரம்பரிய நிலங்களைப் பறிப்பதும் - இப்படியாக எமது இனத்தின் இனக்கொலைக்கு வழிவகுப்பது மிகப் பெரிய பயங்கரவாதம்.

சிங்கள பேரினவாத ஆளும் வர்க்கமே எமது மக்கள் மீது உண்மையான பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறது. இந்த அதர்மமான வன்முறையையே அரச பயங்கரவாதம், என்கிறோம். இந்த அரச பயங்கரவாதத்தின் இயந்திரமாக இயங்குவது ஆயுதப் படைகள். ஆயுதப்படைகளின் ஆதிக்க வல்லமையினால். மக்களை அடக்குமுறைக்குள் ஒடுக்குபவர்களை அரச பயங்கரவாதிகள் என்கிறோம். இப்படிப்பட்ட பயங்கரவாதக் கும்பல் ஒன்றுதான் இன்று இலங்கையில் ஆட்சி புரிகிறது

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

* இந்த அரச பயங்கரவாத இயந்திரத்திற்கு எதிராக ஆயுதமேந்திப் போராடும் நாம் பயங்கரவாதிகளா?

* அடிமைத்தனத்தால், அவமானத்தால் அல்லற்படும் எமது மக்களின் தன்மானத்திற்காகப் போராடும் நாம் பயங்கரவாதிகளா?

* ஈழத் தமிழ் இனத்தின் சுதந்திரச் சுடரை உலகெங்கும் பிரகாசிக்கச் செய்யும் எமது போராட்டம் பயங்கரவாதமாகுமா?

அதர்மத்தையும், அநீதியையும், அடக்குமுறையையும் எதிர்த்துப் போராடும் நாம் பயங்கரவாதிகள் அல்லர். ஒடுக்கப்படும் ஓர் இனத்தின் விடிவுக்காகப் போராடும் புரட்சிப் போராளிகள் நாம்.

இந்த உண்மையை அரச பயங்கரவாதிகளுக்கு அடிமைப் பட்டுக் கிடக்கும் தமிழ் அரசியல் தலைவர்களும் உணர்ந்து கொள்ளவேண்டும். அன்று நீங்கள் மூட்டிய தேசியவாதத் தீயில், அந்தச் சுதந்திர மகா யாகத்தில் பிறந்த அக்கினிக் குழந்தைகள் நாம். என்றும் நாம் விடுதலை நெருப்பாகவே எரிந்துகொண்டிருப்போம். எம்மில் சுடர் விடும் சுதந்திரத்தீயை எவராலும் அணைத்துவிட முடியாது.

காந்திஜியின் மென்முறைப் பாதையைத் தழுவுவதாகக் கூறிக்கொண்டு, வன்முறை ஆயுதப் போரை வன்முறையாகக் கண்டித்துவரும் உங்களுக்கு காந்திஜியின் கீழ்க் கண்ட வசனங்கள் எமது போராட்டப் பாதையைப் புரிய வைப்பதாக அமையுமென நம்புகிறோம்.

"கோழைத்தனத்திற்கும் வன்முறைக்கும் மத்தியில் ஒரு தெரிவு இருக்குமானால் நான் வன்முறையையே ஆதரிப்பேன் ஓர் இனம் முற்றாக நசுக்கப்படுவதை பார்த்துக் கொண்டி-



ருப்பதைவிட நான் ஆயிரம் தடவைகள் வன்முறையையே விரும்புவேன். அவமானத்தின் இழிவான சாட்சியாக இருப்பதைவிடக் கௌரவத்தைக் காப்பாற்ற நான் ஆயுதமேந்தவும் தயார்."

(Mahatma Gandhiji, Declaration on question of the use of violence in defence of rights, Guardian, 16 Dec. 1983)

"புலிகளின் தாகம்தமிழீழத் தாயகம்"

அரசியற் குழு,

தமிழீழ விடுதலைப் புலிகள்

89992

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

யாழ்ப்பாணம்.)

## தமிழீழவிடுதலைப் புலிகள் வெளியிட்ட அரசியல் சித்தாந்த நூல்கள்

1 சோசலிசத் தமிழீழத்தை நோக்கி... (நவம்பர் 1979)

2 இனவெறிப் பிடிக்குள் ஈழத்தமிழினம் (ஜனவரி 1981)

3 அரச பயங்கரவாதமும் ஆயுதப் புரட்சியும் (ஏப்பிரல் 1983)

4 Liberation Tigers and Tamil Eelam Freedom Struggle (English) (Aug. 1983)

5 Women and Revolution The Role of Women in Tamil Eelam National Liberation Struggle (Egnlish) (November 1983)

6 சோஷலிசதத்தத்துவமும் கெரில்லா யுத்தமும் (பெப்ரவரி 1984)

7 பெண்களும் புரட்சியும் (பெப்ரவரி 1984)

8 தமிழீழம் என் தாகம் ((ஏப்பிரல் 198)

PUBLIC LIBRARY
JAFFNA

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழ விடுதலைப் புலிகள்

Liberation Tigers Of

TAMIL EELAM

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகப